# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 18, 2021 Weekly E-paper ● December 18, 2021




## காக்கும் மாநில அரசு! காக்க வைக்கும் ஒன்றிய அரசு!

மா.உதயகுமார்

**வாரணாசியில் மோடியும், தமிழ்நாட்டில் ஸ்டாலினும்!**

வெற்றிச்செல்வன்

**சூரியனின் அனல் இலையின் வாட்டம்**

தலையங்கம்

**வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம்**

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 18, 2021 Weekly E-paper ● December 18, 2021


# காக்கும் மாநில அரசு! காக்க வைக்கும் ஒன்றிய அரசு!

**மா.உதயகுமார்**

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் பெய்திட்ட கனமழைகளில், மூன்றாவது பெரிய கனமழையைச் சென்னை சென்ற மாதம் கண்டது.

மழை வெள்ளப் பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகளைத் தமிழ்நாடு அரசு விரைந்து செய்திட்டதை அனைத்துத் தரப்பினருமே பாராட்டினர். நிவாரணப் பணிகளுக்காக, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை 8,998 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை எந்தத் தொகையும் தமிழகத்திற்கு விடுவிக்கப்படவில்லை.

மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்ய ஒன்றிய அரசு ஒரு குழுவை அனுப்பி வைத்தது. ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளரும் நிதி ஆலோசகருமான திரு.ராஜீவ் சர்மா அவர்கள் தலைமையிலான இக்குழு நவம்பர் 22ஆம் தேதி மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்தது. ஆனால் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆகியும் இன்னும் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் திமுகவும் விசிகவும் இதுகுறித்துக் கேள்வி எழுப்பினர். இக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டவுடன்தான் 'கடுமையான இயற்கைப் பேரிடர்'(severe nature) என்பதை உறுதி செய்ய முடியும் என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

"யானையைப் பார்க்க எதற்கு வெள்ளெழுத்து கண்ணாடி?" என்ற ஒரு சொல்லாடல் உண்டு. உலகறிந்த இயற்கைப் பேரிடருக்கு இப்படிப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி, ஆமை வேகத்தில் செயல்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகுதான் தேசியப் பேரிடர் நிவாரண நிதியை விடுவிக்க முடியும் என்று சொல்வது, தமிழ்நாட்டு மக்கள் நலனில் பாஜக அரசு கொண்டிருக்கும் அக்கறையின் தன்மையை உணர்த்துகிறது.



> **"தமிழ்நாட்டின் பேரிடருக்கு நிதியை விடுவிக்கக் கூறினால் விதிமுறைகளைப் பின்பற்றித்தான் செய்யமுடியும் என்று பதிலளிக்கும் மத்திய அமைச்சர்கள், குஜராத்துக்குக் கொடுக்கும் போது ஏன் எந்த விதிமுறைகளையும் பின்பற்றுவது இல்லை?"**

2017இல் இதேபோல் குஜராத்தில் ஒரு பேரிடர் ஏற்பட்ட போது, மூன்றே நாட்களில் உடனடியாக 500 கோடியை மோடி தலைமையிலான பாஜக அரசு விடுவித்து இருக்கிறது என்பதை திமுகவின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டின் பேரிடருக்கு நிதியை விடுவிக்கக் கூறினால் விதிமுறைகளைப் பின்பற்றித்தான் செய்யமுடியும் என்று பதிலளிக்கும் மத்திய அமைச்சர்கள், குஜராத்துக்குக் கொடுக்கும் போது ஏன் எந்த விதி முறைகளையும் பின்பற்றுவது இல்லை? குஜராத் பேரிடருக்கும் விதிமுறைகளைப் பின்பற்றி பொறுமையாகத்தான் நிதி ஒதுக்க வேண்டும் என்று சொல்ல வரவில்லை. அதே அக்கறையை ஏன் தமிழ்நாட்டின் மீது அவர்கள் செலுத்துவதில்லை என்பதுதான் கேள்வி.

எதற்கெடுத்தாலும் "ஒரே நாடு" "ஒரே இந்தியா" என்று முழக்கமிடும் பாஜகவினர், ஒரே நாட்டிற்குள் இருக்கும் இரு வேறு மாநிலங்களுக்கு இடையில் பாரபட்சமற்ற அணுகுமுறையை ஏன் கடைபிடிப்பதில்லை?

இந்தியாவிற்கான வளம் சேர்க்கும் மாநிலங்களில் முதன்மையானதாக இருக்கும் தமிழ்நாடுதான், வஞ்சிக்கப்படுவதிலும் தொடர்ந்து முதன்மையான மாநிலமாகவே இருந்து வருகிறது.

'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்று அறிஞர் அண்ணா அன்று சொன்ன நிலை இன்றும் தொடர்கிறது. மக்கள் நல அரசாகவும் விரைந்து செயல்படும் அரசாகவும் திமுக அரசு இருப்பதால்தான், 2015இல் ஏற்பட்டது போன்ற பேரிழப்புகளைச் சந்திக்காமல் தமிழகம் தப்பித்து இருக்கிறது.

மாநில அரசு காத்து நிற்கிறது. ஒன்றிய அரசு காக்க வைக்கிறது.

# வாரணாசியில் மோடியும், தமிழ்நாட்டில் ஸ்டாலினும்!

**வெற்றிச்செல்வன்**

“கன்னான் வார்த்துக் கொடுத்த செப்புப் பொம்மைகளைச் சுவாமிகள் என்று சொல்லி, அதை வண்டியில் வைத்து வாத்தியத்துடன் இழுப்பதும், அதற்குக் கல்யாணம் காரியாதி செய்வதும், பிள்ளை குட்டிகள் இருப்பதாகக் காட்டுவதும், சோறு பலகாரம் படைப்பதுமான முட்டாள்தனமான காரியங்கள்.................”
- தந்தை பெரியார் (குடிஅரசு, 17.11.1945)

கடந்த 13.12.2021 அன்று உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில், காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தில் ரூ 600 கோடி செலவில் நடைபெற்ற மேம்பாட்டுப் பணிகளைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார். கடந்த 7 ஆண்டுகளில் கோயில் கட்டுமானம் தொடர்பான பல்வேறு பணிகளை மோடி செய்துள்ளதாக இந்து தமிழ்திசை நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது (15.12.2021). குஜராத்திலுள்ள சோமநாதர் கோயிலில் 80 கோடி செலவிலும், உத்தரகாண்டில் உள்ள கேதர்நாத் கோவிலில் 130 கோடி செலவிலும் பணிகள் நடைபெற்றுள்ளதாக அச்செய்தி தெரிவிக்கிறது. இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் தொடர்ந்து கோயில் கட்டுமானப் பணிகளை ஒன்றியப் பிரதமர் மோடி மேற்கொண்டு வருவதாகவும் பெருமையுடன்(!) செய்தி வெளியிட்டுள்ளது இந்து நாளிதழ்.

வளர்ச்சியைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் பாஜகவின் ஆட்சியில் வளர்ந்துவருகிறது என்னவோ கோயில் கட்டுவதற்காகச் செலவிடப்படும் தொகைதான். அதுமட்டுமன்று. கோயில்கள் கட்டப்படும் ஒவ்வொரு நிகழ்விலும் பிரதமரே நேரடியாகக் கலந்துகொண்டு பூஜை, புனஸ்காரங்களைச் செய்வதிலும் ஈடுபட்டு வருவது முகம் சுளிக்கத்தக்கதாக உள்ளது. இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது 70 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

சோமநாதர் கோயில் புனரமைக்கப்பட்டபோது அதில் அப்போதைய குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் கலந்து கொள்வதை





அறிந்த அப்போதைய பிரதமர் நேரு, அந்நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டாம் என்று குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொண்டார். என்றாலும் அதை மீறி இராஜேந்திர பிரசாத் அந்நிகழ்வில் கலந்து கொண்டார். அப்போது நேரு தான் எழுதிய கடிதத்தில் பயன்படுத்திய வரிகள் முக்கியமானவை. *(Nehru wrote to Prasad advising him “not to participate in the spectacular opening of Somnath temple [which]....... unfortunately has a number of implications. Personally, I thought this was no time to lay stress on large-scale building operations at Somnath. This could have been done gradually and more effectively later. However, this has been done. I feel that it would be better if you did not preside over this function” India after Gandhi Ramachandra Guha, page no.131, 132).*

தொழிற்சாலைகள், அணைகள் என்று தனது ஒவ்வொரு செயலிலும் வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு செயல்பட்ட நேருவை, வெறும் வார்த்தைகளால் ஏமாற்றும் வாய்ச்சொல் வீரர்கள் இன்று தூற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதோ நிலைமை தலைகீழாக உள்ளது. ஒன்றியத்தின் பிரதமர் ஒவ்வொரு கோவில் திறப்பு நிகழ்ச்சியிலும் ஓடி ஓடிக் கலந்து கொள்கிறார். இது இந்தியா மதச்சார்பற்ற நாடு என்று சொல்லப்படுவதை கேள்விக்குள்ளாக்குகிறது. ஒரு பக்கம் இவ்வாறு நடந்து கொண்டிருக்க தமிழ்நாட்டிலோ முதலமைச்சர் ஸ்டாலின், கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் கல்லூரிகளை அமைத்துக் கொண்டிருக்கிறார். அது குறித்த அறிவிப்புகள் வரிசையாக வந்து கொண்டிருக்கின்றன. கோயில் தலமனைத்தும் பள்ளிகள் செய்யும் தமிழக அரசின் செயல் பாராட்டுதலுக்குரியது.

அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து மக்கள் நலன் சார்ந்தப் பணிகளை முதல்வர் மேற்கொண்டு வருகிறார். வெள்ள நிவாரணமாகட்டும், கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகள் ஆகட்டும் உடனுக்குடன் விரைந்து செயல்படும் முதலமைச்சரின் போக்கு நம்மை வியக்கவைக்கிறது. அதற்கு மிக அண்மைய எடுத்துக்காட்டு, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடுவதில் ஒரு பிரச்சினை வருகிறபோது உடனடியாக அதனை மாநிலப் பாடலாக அங்கீகரித்து அரசாணை வெளியிட்டுள்ளர் தமிழ்நாடு முதல்வர்.

கோயில்களோடு ஒன்றிப் போயிருக்கிறார் வாரணாசியில் பிரதமர் மோடி. மக்களுக்கான பணிகளைச் செய்வதில் விரைவு காட்டுகிறார் தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலின்.

காவிக்கும், கருப்புக்கும் உள்ள வேறுபாடு, இதுதான்.

●

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சூரியனின் அனல் இலையின் வாட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு ஒழுங்காகச் செயல்படவில்லையாம். தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லையாம்; இவ்வாறு சொல்லிக் கொண்டு, மக்களால் தூக்கி எறியப்பட்ட அ.தி.மு.க, மாவட்டங்கள் தோறும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது.

அ.தி.மு.க ஆட்சியில் என்ன நடந்தது என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஆட்சியில் கட்டியக் கட்டிடங்கள் பெயர்ந்து விழுகின்றன. அவர்கள் ஆட்சியில் கட்டியப் பாலங்கள் இடிகின்றன அல்லது வெள்ளத்தில் இழுபட்டு ஓடுகின்றன.

அவர்கள் ஆட்சியில் ஊழல்களுக்குப் பஞ்சமில்லை. இன்று துடிக்கிறார்கள் பழிவாங்கும் நோக்கம் என்று. அவர்கள் ஆட்சியில் நடந்தது கொடநாடு கொலைகள். இன்று பதறுகிறார்கள் விசாரணையைக் கண்டு.

அவர்கள் ஆட்சியில் மக்கள் பணிகளைப் பார்க்காமல், அடிமையாக பா.ஜ.கவைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சொல்கிறார்கள், தளபதியின் ஆட்சி சரியில்லையாம்.

ஸ்டாலின் முதல்வராகப் பெறுப்பேற்றவுடன் குடும்ப அட்டைக்கு 4000 ரூபாய், பேருந்துகளில் பெண்கள் – குழந்தைகளுக்குக் கட்டணமில்லாப் பயணம், பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் போன்ற தி.மு.கழகத் தேர்தல் அறிவிப்புத் திட்டங்கள் தொடங்கி இன்று வரை மக்கள் நலப்பணிகளைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறார், அவர்.

கொரோனா உச்சத்தைத் தொட்டுத் தலைவிரித்தாடிய போது அதைக் கட்டுக்குள் கொண்டு வந்தது தி.மு.கழக அரசு. வரலாறு காணா மழை வெள்ளப் பாதிப்பின் போது அ.தி.மு.கவைப்போல வானத்தில் பறந்து பார்க்காமல், மக்களைத் தேடி வெள்ளத்தில் நடந்து சென்று பார்த்தவர், பாதுகாத்தவர் முதல்வர் ஸ்டாலின்.

முப்படைத் தளபதி பிபின் ராவத், இராணுவ வீரர்கள் விபத்தில் இறந்த போது நீலகிரிக்கு நேரில் சென்று உதவிகளைச் செய்து, இன்று தென் மண்டல லெப்டினன் கர்ணலால் "நமது முதல்வர்" என்று பாராட்டப்பட்டவர், ஸ்டாலின்.

அவ்வளவு ஏன் ! நீதிமன்றத்தில் நீதிபதி சொல்கிறார், "ஒரு முதலமைச்சர் செய்யவேண்டிய வேலை நேரத்தை விட கூடுதலாகப் பணி செய்கிறார் தமிழ்நாடு முதல்வர்" என்று.

"இருட்டில் இருந்து கொண்டு உலகளப்பார்" என்று கவியரசர் கண்ணதாசன் சொன்னது போல, உலகளந்து கொண்டிருக்கும் இரட்டை இலையின் போராட்டம், அவர்கள் கால ஆட்சியை மக்கள் முன் அம்பலப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

இந்நிலையில் போராட்டமாம், போராட்டம்.

சூரியனின் ஆட்சியில், இலை வாடும், வதங்கும். இது மக்களின் தீர்ப்பு !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையத்தளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408


# பாராட்டுவோம் முதல்வரை!



## தமிழ்த்தாய் வாழ்த்து பாட [அரசு ஆணை]

- "நீராரும் கடலுடுத்த" எனத் தொடங்கும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது.
- பாடலானது 55 வினாடிகளில் முல்லைப் பாணிப் பண்ணில் (மோகன ராகம்) மூன்றாம் நடையில் (திசுரம்) பாடப்பட வேண்டும்
- கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்கும் முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.
- பாடும் போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்கு அளிக்கப் படுகிறது.
- இசை வட்டுகளின் மூலம் இசைப்பதைத் தவிர்த்து, பயிற்சி பெற்றவர்கள் வாய்ப்பாடலாகப் பாட வேண்டும்.
- தனியார் அமைப்புகளின் நிகழ்வுகளிலும், தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும்.

**கருஞ்சட்டைப் பதிப்பகம்**




விரைவில்
வெளிவருகிறது

**ஏன், பெரியார் மதங்களின் எதிரி?**

இணையத்தள முகவரி: karunchattaibooks.com
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை – 24

# வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம்

**சாரதாதேவி**

எதற்காக இந்திய நாடு முழுவதும் 10 லட்சம் வங்கி ஊழியர்கள் கடந்த 16, 17 நாள்களில் வேலை நிறுத்தம் செய்தார்கள்? அவர்கள் ஊதிய உயர்வு கேட்டு அவ்வப்போது செய்வதுதானே என்கிறீர்களா? இல்லை. தங்கள் ஊதியத்தைக் கடந்து தங்கள் இருப்பையே கேள்விக்குறியாக்கும் ஆளும் ஒன்றிய அரசின் நகர்வுகளைத் தடுக்கவே அவர்கள் போராடுகிறார்கள்.




ஒன்றிய அரசு நடப்பு குளிர்காலக் கூட்டத்தொடரில் வங்கிகளைத் தனியாருக்கு விற்கும் மசோதாவைத் தாக்கல் செய்ய இருப்பதாகக் கசிந்த தகவலும் அதை ஒட்டி நடந்த பேச்சு வார்த்தைத் தோல்வியாலும் வங்கி அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் கூட்டுச் சம்மேளனம் இந்த வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. நாட்டின் பொருளாதாரத் தூண்களாக இருக்கும் பொதுத் துறை வங்கிகளைத் தனியார் மயமாக்க ஏன் ஒன்றிய அரசு முனைகிறது?

பெரும் பணக்காரர்களின் ‘இலேவாதேவி’ என்று சொல்லப்பட்ட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காக, பெரும் பணக்காரர்களால் நடத்தப்பட்டு வந்த 15 வங்கிகளை 1969இல் ஒரு துணிச்சலான நகர்வாக அன்றையப் பிரதமர் திரு.இந்திரா காந்தி அவர்கள் நாட்டுடைமை ஆக்கினார்கள். அதனால் நாட்டின் பொருளாதாரம் கீழ் நோக்கிப் பாயத் தொடங்கியது. ஒன்றிய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள், ஏழ்மை அகற்றும் திட்டங்கள் ஆகியவற்றுக்கான நிதி பொதுவுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் மூலமே பங்கீடு செய்யப்பட்டது.

இலட்சக் கணக்கான இந்தியக் கிராமங்களில் பொதுத் துறை வங்கிகளின் கிளைகள் திறக்கப்பட்டன. நகரங்களின் மூலை முடுக்குகளில் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு எல்லா பொதுத்துறை வங்கிகளும் கிளைகள் தொடங்கின. இலட்சக் கணக்கான இளைஞர்களுக்கு அவற்றில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. கோடிக்கணக்கான ஏழை எளிய மக்கள் வங்கிகளில் நுழைந்து தங்கள் சிறு சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கினார்கள். அதன் மூலம் அவர்களின் வேளாண்மை, சிறு, குறு தொழில்கள், கல்வி, ஆகியவற்றிற்கு வங்கிகளின் கடன் உதவிகளும் கிடைத்தன. கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்த அவர்கள் வாழ்க்கை மீட்கப்பட்டது. இந்திய நாடு தன்னுடைய ஏழ்மை நிலையிலிருந்து மெல்ல மெல்ல முன்னேறத் தொடங்கியது.

இது புரட்சி அல்லவா? விடுதலை பெற்று 2 பத்தாண்டுகள் தேசத்தின் நிர்மாணப் பணிகள் செய்த பின்னரான அடுத்த 2 பத்தாண்டுகள் இந்த நாடு வளர்ச்சிப் பாதையில் சென்றது வங்கிகளால்தான். 1970கள் தொடங்கி 1990 வரை சென்ற இந்த வளர்ச்சி, அடுத்து மூன்று சூறாவளிகளைச் சந்தித்தது. ஆம்! -உலகமயமாக்கலும், தனியார்மயமாக்கலும், தாராளமயமாக்கலும்! -அவை இந்தியப் பொருளாதாரத்தை மீட்கும் வழிகளாக உலகவங்கி மற்றும் பன்னாட்டுப் பொருளியல் நிதியத்தால் இந்திய ஆட்சியாளர்களுக்குக் காட்டப்பட்டன.

அதையொட்டி “Prudential Norms” எனப்படும் பன்னாட்டு தணிக்கையியல் கோட்பாடுகளை இந்தியா மீது திணித்தது உலக வங்கி. அதன் படி, வங்கிகளில் நிலுவையிலிருந்தக் கடன்கள் மூன்றே தவணைகள் தள்ளிப் போனாலும் வாராக் கடன்களாக வகைப்பட்டன. சட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளவும், சொத்துகளை முடக்கவும், வாராக் கடன் காலம் வரை அவற்றுக்கென இலாபத்திலிருந்து ஒரு தொகையை ஒதுக்கீடு செய்யவும் வங்கிகள் பணிக்கப்பட்டன. அப்போதிருந்தே வங்கிகள் நட்டக் கணக்கைத்தான் காட்டி வருகின்றன.

இதில் நகைமுரண் என்னவென்றால், அரசியல் அழுத்தத்தால் பெரு வணிகர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களே வாராக்கடன் பட்டியலில் 80% த்தை ஆக்கிரமித்தன. இதன் விளைவுகளை வங்கிகளின் பலவீனமாக அறிவித்து, மீண்டும் பெரு வணிகர்களிடமே வங்கிகளைத் தாரை வார்க்கும் சூழ்ச்சியை, தன் முதல், வாஜ்பாய் தலைமையிலான ஆட்சிக் காலத்திலேயே பா.ஜ.க. முன்னெடுத்தது. தனியார்மயமாக்கலுக்கு தனி துறையையே அறிவித்தது. அப்போது தொடங்கி, வங்கி ஊழியர்களின் போராட்டம், 25 ஆண்டு காலமாகத் தீவிரமாகி வருகிறது.

இந்தச் சூழலில்தான் பொதுத்துறை ஊழியர்களின் தோள்களின் மீது இதைத் தடுத்து நிறுத்தும் கடமை வந்து விழுந்திருக்கிறது. வங்கிகளை இணைத்துப் பன்னாட்டு வங்கிகளுக்கு இணையான ஐந்தே பெரிய வங்கிகளாக மாற்றுவோம் என்றார்கள். பல வங்கிகளை இணைத்தும் விட்டார்கள். இப்போது அதையும் தனியாருக்குத் தாரை வார்ப்போம் என்று இறங்கியுள்ளார்கள்.

ஓய்வூதிய இழப்பு, ஊதிய ஒப்பந்தப் பின்னடைவு, ஆட் குறைப்பு, பணிச்சுமை அதிகரிப்பு, அத்தியாவசியச் சேவைக்குரிய நெருக்கடிகள் என வங்கி ஊழியர்கள் தாங்கொணாத் துயரில் உழல்கிறார்கள். கொரோனா பெருந்தொற்றில் மட்டும் இந்தியா முழுவதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களும் அலுவலர்களும் உயிரிழந்துள்ளனர். பலர் நெருக்கடி தாங்காமல் தற்கொலை செய்துள்ளனர். இருப்பினும் தங்களைப் போன்ற எதிர்கால ஊழியர்களின் நலன், இந்த நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாடு, பொதுத் துறைப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக வீதியில் இறங்கியுள்ளார்கள்.

ஒன்றிய அரசின் பொருளாதாரத் திட்டங்களை முன்மொழிவதிலும், முன்னோடி மாநிலமாக நடைமுறைப் படுத்துவதிலும், முந்தி நிற்கும் தமிழ்நாடு அரசு, அறத்துடன் இந்தப் போராட்டத்தை ஆதரித்துக் குரல் கொடுத்துள்ளது. வங்கி ஊழியர்களின் போராட்டம் வெல்லட்டும்! பொதுத் துறை மீண்டெழட்டும்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian